


**05. 12. 2025**

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா ரஷ்யா இடையிலான 23ஆவது வருடாந்திர உச்சிமாநாடு புதில்லியில் இன்று தொடங்கியது.

ரஷ்யாவும் இந்தியாவும் அமைதிக்கான பாதையில் பயணிப்பதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. மதுரை திருப்பரங்குன்றம் தீபம் தொடர்பான பிரச்சனையில் திமுக உறுப்பினர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதால் மக்களவை இன்று நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

3. நாட்டில் ரயில் விபத்துகள் 90 சதவிகித அளவிற்கு குறைந்துள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ் மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.

4. காஞ்சிபுரம் பிள்ளைபாக்கம் சிப்காட்டில் ஆயிரத்து 3 கோடி ரூபாய் முதலீட்டிலான கண்ணாடி உற்பத்தி திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

5. குவ்ஹாட்டி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் தருண் மன்னேபள்ளி, மிதுன் மஞ்சுநாத் இன்று களமிறங்குகின்றனர்.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர்

இந்தியா அமைதியையே எப்பொழுதும் விரும்புவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடனான இருதரப்பு பேச்சுவார்த்தையில் இதனை தெரிவித்த பிரதமர், புட்டினின் வரலாற்று சிறப்பு மிகு இந்திய வருகை குறித்து பெருமிதம் வெளியிட்டார்.

ரஷ்யா - உக்ரைன் இடையில் நிலவும் சண்டைக்கு அமைதியான தீர்வை இந்தியா விரும்புவதாக அவர் எடுத்துரைத்தார்.

உக்ரைன் போர் தொடங்கிய நாளில் இருந்து அது சார்ந்த அனைத்து முன்னேற்றங்களையும் ரஷ்ய அதிபர் தம்மிடம் எடுத்துரைத்ததாக குறிப்பிட்டார்.

ரஷ்யாவும் இந்தியாவும் இணைந்த உலகை அமைதி பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியா ரஷ்யா இடையிலான நட்புறவு குறித்து மகிழ்ச்சியும் பெருமிதமும் தெரிவித்த பிரதமர் முதல் முறையாக திரு.விளாடிமிர் புட்டின் இந்தியாவிற்கு வந்து தற்போது 25 ஆண்டுகள் நிறைவடைந்ததாக குறிப்பிட்டார்.

இந்தியாவிற்கு புட்டினை வரவேற்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்ளவதாகவும் பிரதமர் எடுத்துரைத்தார்.

முன்னதாக இந்தியா ரஷ்யா நாடுகளுக்கிடையிலான இருதரப்புஉறவுகளின் முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் ஆய்வு செய்தனர்.

பரஸ்பர நலன் சார்ந்த சர்வதேச பிராந்திய விஷயங்கள் குறித்தும் இருவரும் விவாதித்தனர்.

ரஷ்ய அதிபர் திரு.விளாடிமிர் புத்தினுக்கு குடியரசு தலைவர் மாளிகையில் இன்று பாரம்பரிய சிறப்புமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது.

ராஜ்கட்டில் அமைந்துள்ள தேச பிதா மகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்தில் ரஷ்ய அதிபர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புத்தினை கவுரவிக்கும் வகையில் இன்றுமாலை சிறப்பு விருந்து அளிக்கிறார்.

*************

மக்களவை

மதுரை திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பான பிரச்சனையில் திமுக உறுப்பினர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதால் மக்களைவை முதலில் நண்பகல் 12 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டது,

அவை இன்று கூடியதும் எதிர்கட்சியினர் அவையின் மையப்பகுதியில் குழுமி இப்பிரச்சனையை எழுப்பி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைதொடர்ந்து பேசிய அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா இது மாநிலம் சார்ந்த பிரச்சனை என்றும், இதில் மத்திய அரசுக்கு எந்த பங்கும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

உறுப்பினர்கள் இருக்கைக்கு திரும்பி அவை அலுவல்களை நடத்த ஒத்துழைப்பு நல்க அவர் கேட்டுக்கொண்டார்.

இருப்பினும் தொடர்ந்து எதிர்கட்சியினர் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது திமுக உறுப்பினர்களின் நடவடிக்கைக்கு நாடாளுமன்ற விவகாரங்களுக்கான இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கண்டனம் தெரிவித்தார்.

மாநிலத்தில் விவாதிக்க வேண்டிய பிரச்சனையை வேண்டுமென்றே திமுக உறுப்பினர்கள் எழுப்பி அவையை முடக்குவதாக அவர் குற்றம் சாட்டினார்.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனையில் திமுக உள்ளிட்ட எதிர்கட்சியினர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

*************

தேஜஸ்வி சூர்யா

பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி உறுப்பினர் திரு.தேஜஸ்வி சூர்யா, கார்த்திகை தீபம் ஏற்றுதல் பிரச்சனையில் பிஜேபி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்ட விவகாரத்திற்கு கண்டனம் தெரிவித்தார்.

வரும் தேர்தலில் தமிழகத்தில் மக்கள் திமுக ஆட்சியை வெளியேற்றுவார்கள் என்றும் அவர் கூறினார்.

*************

அஷ்விணி வைஷ்ணவ்

நாட்டில் ரயில் விபத்துகள் 90 சதவிகித அளவிற்கு குறைந்துள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், விபத்துகளுக்கான காரணங்களை அரசு ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுத்ததால் எண்ணிக்கை பெருமளவு குறைந்ததாக குறிப்பிட்டார்.

உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட தானியங்கி ரயில் பாதுகாப்பு கவாச் முறையால் ரயில் விபத்துகள் தடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

*************

கிரண் ரிஜிஜூ

வக்ஃப் சொத்துக்களுக்கான இணையதளத்தில் ஒரு லட்சத்து 51 ஆயிரம் வக்ஃப் சொத்துக்கள் மட்டுமே இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மை விவகாரங்களுக்கான அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வக்ஃப் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்ட பின்னர் இந்த இணையதளம் தொடங்கப்பட்டு, ஆறு மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டிருந்ததை சுட்டிக்காட்டினார்.

இந்த கால அவகாசம் இன்றுடன் முடிவடையும் நிலையில், லட்சக்கணக்கான சொத்துக்கள் இதுவரை பதிவு செய்யப்படாமல் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உமீத் இணையதளத்தில் அடுத்த 3 மாதங்களுக்குள் சம்மந்தப்பட்டவர்கள் தங்களது சொத்துக்களை பதிவு செய்ய அமைச்சர் அறிவுறுத்தினார்.

*************

மாநிலங்களவை நட்டா

சுகாதார கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மத்திய அரசு ஒதுக்கிய நிதியை மாநிலங்கள் பயன்படுத்தாமல்

இருப்பதாக மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் ஜே.பி.நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

மாநிலங்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், மத்திய அரசு சுகாதாரத்திற்காக 64 ஆயிரம் கோடி ரூபாயை மாநிலங்களுக்கு வழங்கிய போதிலும் இதுவரை 30 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே செலவழிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

மத்திய அரசு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுகாதாரத்திற்காக 2.5 சதவிகித நிதி பயன்பாட்டிற்கு இலக்கு நிர்ணயித்திருந்போதும் இதுவரை 1.9 சதவிகித நிதி மட்டுமே பயன்படுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

*************

விமானம்

சென்னை விமான நிலையத்தில் இருந்து பெங்களுரு மும்பை – டெல்லி – கொல்கத்தா – ஹைதராபாத் செல்ல வேண்டிய அனைத்து இண்டிகோ ஏர் லைன்ஸ் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

விமானிகள் மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறையால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து விமானத்தில் பயணிக்க முன்பதிவு செய்த பயணிகள் அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

*************

ரிசர்வ் வங்கி

ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடனுக்கான வட்டி விகிதம் 0.25 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

மும்பையில் இன்று ரிசர்வ் வங்கியின் இருமாத கொள்கையை வெளியிட்ட வங்கியின் ஆளுநர் திரு.சஞ்சய் மல்ஹோத்ரா, நடப்பாண்டில் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதம் 7.3 சதவிகிதமாக அதிகரிக்கும் என்றும், குறிப்பிட்டார்.

*************

முதலமைச்சர்

காஞ்சிபுரம் மாவட்டம் சிப்காட் பிள்ளைபாக்கம் தொழிற்பூங்காவில் ஆயிரத்து 3 கோடி ரூபாய் கண்ணாடி தொழில்நுட்ப மின்னணு நவீன உற்பத்தி தொழிற்சாலையை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், சூரிய ஒளி சார்ந்த கதிரியக்க சோதனை மையம், மின்சாதனங்கள் சோதனை மையம், மின்னணு ஆய்வகம் உள்ளிட்டவை இதில் ஏற்படுத்தி தரப்படும் என்றார்.

வாய்ஸ்

*************

ஜெயலலிதா

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 9ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி உள்ளிட்டோர் இன்று மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நாமக்கல், நீலகிரி மாவட்டம் கொடநாடு உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஜெயலலிதாவின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்தும், மலர்கள் தூவியும், அஇஅதிமுகவினர் இன்று அஞ்சலி செலுத்தினர்.

*************

மூர்த்தி

மதுரை கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள ஏறுதழுவுதல் அரங்கத்தில் நடைபெற்ற தமிழர்களின் பாரம்பரிய ஜல்லிகட்டு போட்டிகளை மாநில வணிகவரித்துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

வெளிநாடுகளை சேர்ந்த ஹாக்கி வீரர்கள் தமிழகத்தின் பாரம்பரிய உடை அணிந்து இப்போட்டிகளை கண்டு களித்தனர்.

*************

தர்மபுரி:

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளிலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த

பணிகள் 100 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.சதீஷ் தெரிவித்துள்ளார்.

கலெக்டர் வாய்ஸ்

*************

மண் வளம்

உலக மண்வள தினத்தையொட்டி தர்மபுரி பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையத்தில் மண்வள கருத்தரங்கு, இதன் ஒருங்கிணைப்பாளர் திருமதி.வெண்ணிலா தலைமையில் இன்று நடைபெற்றது.

மண்ணின் உயிர்தன்மை குறித்து திருச்சி புதுக்குடியை சேர்ந்த விவசாயி ராஜா பேசுகையில்

வாய்ஸ்

*************

நீர்த்தேக்கம்

சென்னையின் ஆறாவது நீர்த்தேக்கத்தை கோவளத்தில் அமைக்க, தமிழ்நாடு கடலோர மண்டல ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

471 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 4 ஆயிரத்து 375 ஏக்கரில் இந்த புதிய நீர்த்தேக்கம் அமைய உள்ளது.

*************

கேலோ இந்தியா

நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட காரமடையில் 3 ஆம் கட்ட கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள் இன்று தொடங்கின.

மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் ஏற்பாட்டின் கீழ் நடைபெற்ற இந்த விளையாட்டில், வாலிபால், கபடி, கோ கோ, சிலம்பரம், யோகா போட்டிகள் இதில் இடம்பெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு வரும் 25ஆம் தேதி டாக்டர் முருகன் பரிசுகளை வழங்க உள்ளார்.

*************

பேட்மிண்டன்

குவ்ஹாட்டி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் தருண் மன்னேபள்ளி – இந்தோனேசியாவின் **Dendi**-ஐயும்,

மிதுன் மஞ்சுநாத் – ஜப்பானின் **Okimoto**-வையும் இன்று எதிர்கொள்கின்றனர்.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது